Registered as a NewsPaper

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்–IV

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி–15 | 30 –07–2004 | வெள்ளிக்கிழமை | ஓசை –163




# ஜே.வி.பி.இன் மிரட்டலுக்கு அஞ்சவேண்டாம்

# இ.த.அ.சபை பற்றிப் பேசின் ஐ.தே.க. ஆதரிக்கும்

## ஐ.தே.கட்சிப் பேச்சாளர் அரசிற்கு உறுதி

(கொழும்பு)

**இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு ஜே.வி.பி.யினர் விடுக்கும் மிரட்டல்களுக்கு அஞ்ச வேண்டாம் . சனாதிபதி பேச்சுக்களை ஆரம்பித்தால் அதற்கு ஆதரவு வழங்க ஐக்கிய தேசியக் கட்சி தயாராக இருக்கிறது என ஐ.தே.கட்சியின் பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே ராஜித சேனாரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்:- இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அடிப்படையாகக் கொண்டு சனாதிபதி சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அடுத்த நாளே கூட்டணி அரசாங்கம் முடிவுக்கு வருமென ஜே.வி.பி யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச கேகாலை மாவட்டத்தில் நடத்திய ஐந்தாவது மாநாட்டில் எச்சரித் திருந்தார். இது குறித்து சனாதிபதி அஞ்சத்

(IVஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவடைந்த 57 சிறுத்தைகளின் ஒன்பதாம் ஆண்டு நினைவு நிகழ்வு

இதயபூமி என்று அழைக்கப்படும் மணலாற்றுப்பகுதியில் பகைவன் குகைக்குள் புகுந்து ஆட்லறி அதர்மத்தை அழித்தொழித்த 57 சிறுத்தை களின் 9ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வு நேற்று முன்தினம் நடை பெற்றுள்ளது.

பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மேடையில் மாலை 6.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் பொதுச்சுடரினை போராளி தமிழ்க்கவி அவர்கள் ஏற்றிவைக்க, தேசியக்கொடியினை கேணல் ஜெயம் அவர் கள் ஏற்றினார். ஈகச்சுடரினை பிள்ளையார் மாஸ்ரர் ஏற்றினார். லெப். கேணல் கோமளாவின் திருவுருவப்படத்திற்கு தாயார் மலர்மாலை அணி வித்தார். சிறுத்தைப் படை அணி

(IVஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடனான பேச்சுவார்த்தையை எங்கு,எப்போது நடத்தவும் அரசு தயார்

### நிகழ்ச்சி நிரலும் அனுப்பப்பட்டுள்ளதென்கிறார் மங்கள சமரவீர

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுக் கும், சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையில் இடைக்கால நிர்வாக யோசனைகளையும் உள்ளடக்கிய தான பேச்சுக்களை எங்கேயும், எப் போதும் ஆரம்பிப்பதற்கு அரசாங் கம் தயாராகவுள்ளதாக அமைச்ச ரவைப் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

நேற்றுக்கொழும்பில்நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட் டில் உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தை களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான தேவையும், பொறுப்பும் அரசாங் கத்துக்கு உள்ளதென இங்கு தெரிவித்துள்ள அமைச்சர் மங்கள சமரவீர புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கான நிகழ்ச்சி நிரல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட் டுள்ளது. புலிகள் பேச்சுவார்த் தைக்கு அவர்களது அக்கறையை யும், அர்ப்பணிப்பையும் வெளிப்

(IVஆம் பக்கம் பார்க்க)

## கனடாவிலிருந்து வந்த வைத்திய நிபுணர் கிளி.இல் புற்றுநோய் பற்றிக் கருத்தரங்கு

(அலுவலக செய்தியாளர்)

கனடா - மனிற்ரோபா பல்கலைக் கழக விரிவுரையாளரும் வைத்திய கலாநிதியுமாகிய திருமதி சிறிறஞ் சன் நேற்று கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் புற்றுநோய் தொடர்பான கருத்தரங்கு ஒன் றினை நடாத்தியுள்ளார்.

கனடாவில் இருந்து வருகைதந்த டாக்டர் யாழ்ப்பாணத்திலும், பல் கலைக்கழக மருத்துவபீட மாண வர்களுக்கும் இந்த புற்றுநோய் சம்பந்தமாக கருத்தரங்கினை கடந்த செவ்வாய்க்கிழமை நடாத்தினார்.

நேற்று மாலை 7.30 மணியள வில் கிளிநொச்சி வைத்திய சாலையிலும் இக்கருத்தரங்கினை நடத்தினார்.

அவருடைய இந்தப் புற்றுநோய் பற்றிய கருத்தரங்கில் முக்கியமாக புற்றுநோயை முற்கூட்டியே அறிந்து கொள்ளல் மற்றும் புற்றுநோய் தடுத் தல், புற்றுநோயினை உடனடியாக

(IVஆம் பக்கம் பார்க்க)

## இ.த.அதிகாரசபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படக்கூடாது

### ஜே.வி.பி.யின் பா.உறுப்பினர் இ.சந்திரசேகரன்

(கொழும்பு)

இடைக்கால தன்னாட்சி அதி கார சபை இலங்கையில் வாழ் கின்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு மிகவும் பாதகமான தொன்று. எனவேதான் அதன் அடிப் படையில் பேச்சுவார்த்தைகள் ஆரம் பிக்கப்படக்கூடாதென ஜே.வி.பி வலியுறுத்துகிறதென ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் இராம லிங்கம் சந்திரசேகரன் தெரிவித் துள்ளார். தொடர்ந்து அவர் கருத் துத் தெரிவிக்கையில்

ஐ.ம.சு கட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் அல்லது, கொள்கை ஒன்றுள்ளது. அக்கொள்கையின் அடிப்படையில் தான் பேச்சுவார்த் தைகள் நடத்தப்படவேண்டுமென நாம் உறுதியாகவுள்ளோம். அதே வேளை சனாதிபதியால் இவ்வா றான முடிவுகள் தனிப்பட்ட ரீதியாக அறிவிக்கப்படுகின்ற வேளை ஜே.வி.பியுடன் பேசி அல்லது எமது கருத்துக்களை ஆராய்ந்த பின்னர் அல்ல இவ்விடயத்தை சனாதிபதி எங்களுக்கு ஏற்கனவே தெரிவித்து விட்டார்.

இவ்வாறான முடிவுகள் தன்னிச் சையாக அறிவிக்கப்படுகின்ற வேளை அல்லது ஒரு கூட்ட ரசாங்கத்தில் ஏனைய கட்சிகளுடன் ஏனைய தலைவர்களுடன் கலந்தா லோசிக்காமல் தனிப்பட்ட முடிவு கள் எடுக்கப்படுகின்ற போது இது தொடர்பாக முற்றுமுழுதான பொறுப்பை ஜே.வி.பி ஏற்றுக்கொள்ள முடி யாது என்றார்.

## ஆசிரியர் பீடத்தினரின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டது

### தமிழ் நெற் பொலிஸ் அதிகாரிக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழ் நெற் ஆசிரியர் பீடத்தின் அங்கத்தவர் டி.சிவராமின் வீட்டை அத்துமீறிப்பரிசோதனை செய்தும் அவரைப் பயமுறுத்திய செயல் முழு ஆசிரியர் பீடத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசு தவறிவிட்டதையே வெளிப்படுத்துகிறது என சிறிலங்காவின் பொலிஸ்மா அதிபருக்குத் தமிழ் நெற ஆசிரியர் பீடம் அறிவித்துள்ளது.

சுதந்திர ஊடகத்துறை அறிவிப்பாளர் சுசந்த தேசபிரிய இதை அறிவித்துள்ளார்.இம் மாதம் 23 ஆம திகதி சிவராமின் வீட்டைப் பரிசோ தனை செய்தும் எந்தத் தடயங்களையும் பொலிசார் கைப்பற்றவில்லை எனப் பொலிஸ்மா அதிபருக்கு சுட்டிக் காட்டி அறிக்கை ஒன்றினை ஊடகவியலாளர் சங்கம் அனுப்பி உள்ளது.

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் ஐக்கிய தேசியக் கட்சி மீது பாய்ச்சல்

(கொழும்பு)

தற்போதைய அரசு மேற்கொண்டு வருகின்ற செயற்திட்டங்களை முற்றாக குழப்புவதற்கான சதிமுயற்சிகளாக ஐ.தே.கட்சியின் பிரச்சாரங்களை நாம் கருதுவதாக வேலையற்ற பட்டதாரிகளின் கூட்டு சம்மேளனம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இரண்டாண்டு கால ஆட்சிக்காலத்தில் வேலையற்ற பட்டதாரிகளுக்கு ஐ.தே கட்சி என்ன செய்தது என்பதை நிரூபிக்க முடியுமா? எனக் கேள்வி எழுப்பியுள்ளது. இதேவேளை பட்டதாரி களுக்கான இரண்டாண்டு பயிற்சிகாலம் ஓராண்டாக மாற்றப்பட் டுள்ளதென மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

## கொல்லப்படுமுன் கருணாவின் சகாக்களுக்கு மயக்க மருந்து கொடுத்து கொல்லப்படவில்லை

### சிறிலங்காப் பொலிசார் அறிவிப்பு

(கொழும்பு)

கொழும்பின் புறநகரான கொட்டாவவில் கொல லப்பட்ட கருணா குழுவைச் சேர்ந்த எட்டுப் பேரும் மயக்கமருந்து கொடுத்த பின்னரே கொல்லப்பட்டதாக வெளியான செய்திகளை சிறிலங்கா பொலிஸ் மறுத்துள்ளது.

கொல்லப்பட்ட கருணா குழுவுக்கு நிதி மற்றும் சமையல் பொறுப்புக்களை மேற்கொண்டு வந்த தாபோ என்பவர் மயக்க மருந்து கலந்த பாயசத்தை வழங்கி, வீட்டின் பின்புறக் கதவைத் திறந்து வைத்ததாகவும், இதையடுத்து பின்வாசல் வழியாக உள்நுழைந்த ஆறு பே கொண்ட குழுவினரே இந்த எட்டுப் பேரை யும் கொலை செய்ததாகவும் கருணாவின் பெயரைப் பாவித்து பிரச்சாரம் செய்யும் இணையத்தள மொன்றை மேற்கோள் காட்டி கொழும்பு ஊடகம் ஒன்று நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டி ருந்தது., இதனையே பொலிசார் மறுத்துள்ளனர்.

இவர்கள் நித்திரையில் இருந்தவேளை இவர் களின் சகாக்களால் சுட்டுக்கொல்லப்பட்டதாக முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

இதே வேளை, இச்சம்பவம் நடைபெற்ற வீட்டில் நிறுத்தி

(IVஆம் பக்கம் பார்க்க)

# பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களால் வேலையற்ற பட்டதாரிகள் குழப்பம்

(அலுவலக செய்தியாளர்)

நிதி அமைச்சினால் அண்மையில் வேலையற்ற பட்டதாரிகளைப் பொருத்தமான அரசதுறைப் பதவிகளில் ஆட்சேர்ப்பதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து விண்ணப்பித்த பல விண்ணப்பதாரிகளுக்கு விண்ணப்ப முடிவுத் திகதிக்குப் பின்பாக திறைசேரி பிரதிச் செயலாளரினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளமையின் காரணமாக மேற்படி பலர் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில்; மேற்படி வேலையற்ற பட்டதாரிகள் ஆட்சேர்ப்பிற்கென திறைசேரி பிரதிச்செயலாளர் எஸ்.பீ.திவாரத்தினால் விண்ணபதாரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள விண்ணப்பப் படிவங்களில் அனேகமானவை விண்ணப்ப முடிவு திகதியான 27.07.2004 இற்கு பின்பாக 28 ஆம், 29ஆம் திகதிகளிலேயே கிளிநொச்சி மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. இதன் காரணமாக பொருத்தமான அரச துறைப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புக்கு கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பல விண்ணப்பதாரிகள் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் திறைசேரி பிரதிச்செயலர் மூலம் அனுப்பி வைக்கப்பெற்றுள்ள சுற்றுநிருபத்தில் திறைசேரி பிரதிச் செயலரினால் கையொப்பமிடப்பட்டது என எழுதப்பட்டுள்ள பொழுதிலும் பிரதிச்செயலரின் கையொப்பமின்றியே மேற்படி சுற்று நிருபம் அனுப்பி வைக்கப்பெற்றுள்ளமையின் காரணமாக விண்ணபதாரிகள் மத்தியில் பெரும் குழப்பநிலை தோன்றியுள்ளதனையும் அவதானிக்க முடிந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

# முல்லை முன்பள்ளிகளுக்கிடையே பிரதேச விளையாட்டு விழா

முல்லைப் பிரதேச 14 முன்பள்ளிகளுக்கிடையேயான பிரதேச விளையாட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு முல்லை. மகாவித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது. முல்லைப் பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் திரு. சுரேஸ்குமார் தலைமையில் ஆரம்பமானது. மங்கல விளக்கினை முல்லைப் பங்குத் தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளாரும், கள்ளப்பாடு வைரவர் ஆலயக் குருக்களும் ஏற்றினார்கள்

தமிழீழ தேசியக் கொடியினை கடற்புலிகளின் முல்லைப் பிரதேச அரசியல் துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் ஏற்றினார். தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடியினை முல்லை மக்கள் நலன்புரிச்சங்க நிர்வாக இணைப்பாளா திருமதி விஜயகுமாரி ஏற்றினார். ஆசியுரையினை முல்லை. வலய முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையத் தலைவர் ஜெயம்சபாபதி நிகழ்த்தினார்.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. சிறப்பாக நடைபெற்ற இசையும் அசைவும் போட்டி நிகழ்வு - 14 முன்பள்ளி மாணவர்களினால் நடாத்தப்பட்ட போட்டியில் முதலாம் இடத்தை முல்லைத்தீவு புனித இராயப்பர் முன்பள்ளி பெற்றுக்கொண்டது. இரண்டாம் இடத்தை செம்மலை சரிதா முன்பள்ளியும், மூன்றாம் இடத்தை அளம்பில் கடற்கரை அன்னை வேளாங்கன்னி முன்பள்ளியும் பெற்றுக்கொண்டன. (20)

## வரிவிளம்பரம்

### மீட்டல் வகுப்பு (2005 A/L)

உயர்தர கணித, விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான துரித மீட்டல் வகுப்புக்கள் வவுனியா, கிளிநொச்சி ஆகிய இடங்களில் இயங்கும் கேம்பிறிஜ் கல்லூரியில் நடைபெறுகின்றது. (4634)

### அறிவித்தல்

யாழ். தொழில் நுட்ப நிலையம், தண்ணீரூற்று - றேடியோ மற்றும் இலத்திரனியல் திருத்தகம் மேற்படி நிலையத்தில் திருத்த வேலைக்கென தங்களால் வழங்கப்பட்ட பொருட்களை கடந்த 28.07.04 தொடக்கம் 15.08.04 வரையான காலப்பகுதியில் கிழமை நாட்களில் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள். நிலையம் முற்றாக மூடப்படவுள்ளதால் ஒத்துழைப்பு நல்குமாறு வாடிக்கையாளர்களைத் தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். தகவல் : நிலைய நடத்துநர். (சி-9170)

### பொக்ஸ் செற் விற்பனைக்கு

ஒரிஜினல் கென்வூட் ஜப்பான் அம்புலிவயர் (ஐந்து அடுக்கு) செற்றுடன் மேலதிகமாக இரண்டு ஒரிஜினல்(LO.D) பொக்ஸ (100X2W) விற்பனைக்கு உண்டு. நவம் கடை, கண்ணன் கோயில் வீதி, 07ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு(4673)

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத் தேவையான தென்னை, மாதுளை, பலா, மா, எலுமிச்சை (தேசி), தோடை, கயூ, கமுகு, கொய்யா, கொடித்தோடை, நெல்லி, சவுக்கு, சமண்டலை, தவசி, அகத்தி, கறிவேப்பிலை, தூதுவளை, பப்பாசி (றெட்லேடி) போன்ற பலதரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (9895)

# ஆண்டு நினைவலைகள்

17ஆம் ஆண்டு



தோற்றம் 1945 - 08 - 07 மறைவு 1987 - 11 - 14

அமரர் செல்லையா-தாமோதரம்பிள்ளை

01 ஆம் ஆண்டு



தோற்றம் 1950 - 01 - 08 மறைவு 2003 - 08 - 10

அமரர் தாமோதரம்பிள்ளை பொன்னம்மா

திதி-30.07.2004

எமது அன்புத் தெய்வங்களின் ஆண்டு நினைவாக எமது இல்லத்தில் நடைபெறும் ஆண்டுத் திவசத்தில் அனைவரையும் கலந்து கொண்டு ஆத்ம சாந்தியடைய பிரார்த்திக்குமாறும் அன்று நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் வேண்டுகிறோம்.

தகவல்-மகன் பார்த்தீவன்

முகவரி- 01ஆம் வட்டாரம், உலகளந்தபிள்ளையார்கோவிலடி, புதுக்குடியிருப்பு.

[4847]

## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

# நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை :- க.பொ.த.(சாதாரணம்) கற்றிருத்தல்
02. அகவை :- 20 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 06.08.2004
02. சம்பளம் :- நிதித்துறை சம்பளத்திட்டம் படி
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு :- 09.08.2004 ஆம் நாள் பாண்டியன் வாணிபம் கிளிநொச்சி கரடிப்போக்கு பணிமனையில் நடைபெறும்
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி-*
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிமீழ போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-9762)





## வன்னி மண்ணில் முதன் முதலாக

# உடல் வலுவூட்டும் நிலையம் (GYM)





- நீண்ட கால ஆயுளுக்கும்,
- ஆரோக்கியமான வாழ்விற்கு
- உடல் கட்டழகை பேணுவதற்கும்,
- எல்லா விதமான நோய்களையும் இல்லாமல் ஒழிப்பதற்கும்

சிறந்த இடமே ஈழக்கதிர் உடல்வலுவூட்டும் நிலையம்

அரிய சந்தர்ப்பம் இன்றே உங்களது விண்ணப்பங்களுக்கு முந்துங்கள்

பெண்கள் - மாலை 03:30 தொடக்கம் 05:30 வரை
(செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி ஆகிய நாட்களில்)
ஆண்கள் காலை 05.00 தொடக்கம் 10.00 மணிவரை வரலாம்.
பெண்களின் பயிற்சி நேரத்தில் ஆண்கள் அனுதிக்கப்படமாட்டார்கள்.


Tp - 021.2285748

கரடிப்போக்கு, கிளிநொச்சி.

(சி.10046)

# சட்டத்தையும், ஒழுங்கையும் பன்னிரண்டு வருடங்களாக காவல்துறையும், நீதித்துறையும் சரியாக நிலைநாட்டியுள்ளன

## தமிழீழ நீதி நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் பரா



(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தான் சட்டம், ஒழுங்கு சரியான முறையில் பேணப்படுகிறது. மனித உரிமைகள் மதிக்கப்படுகிறது. மக்களின் கலாசாரம், பண்பாடு போன்ற அனைத்தும் பேணப்பட்டு வருகிறது. இவ்வாறு தமிழீழ நீதி நிர்வாகத் துறைப்பொறுப்பாளர் பரா தெரிவித்துள்ளார்.

மன்னார் அடம்பன் பகுதியில் மன்னார் மாவட்டத்துக்கான தமிழீழ நீதிமன்றத் திறப்பு விழா நிகழ்வில் கலந்து சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் மாவட்டத்திலே வசிக்கின்ற மக்கள் நீதிபெறுவதற்காக நீண்டதூரம் பயணித்து பெரும் சிரமங்களை சந்திக்க வேண்டிய நிலை காணப்பட்டதால் அந்த மக்களின் சிரமத்தை நீக்கும் பொருட்டு மன்னார் மாவட்டத்தில் ஒரு நீதி மன்றத்தை அமைக்குமாறு தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் எமக்குப் பணித்திருந்தார். அதற்கமைவாக பலரது ஒத்துழைப்பின் அடிப்படையில் நாம் இந்த நீதிமன்றத்தை குறுகிய காலத்தில் நிறுவியிருக்கின்றோம்.

தாயக விடுதலைப் போருக்காக எமது மக்கள் பலர் தம்முயிரை ஆகுதி ஆக்கியுள்ளனர். அதேவேளை 17 ஆயிரத்துக்கும் அதிகமான போராளிகள் தாயக மீட்புப் போரில் தம்முயிர்களை ஆகுதியாக்கியுள்ளனர். இவ்வாறு பல தியாகங்களைச் செய்த இந்த மண்ணிலே வாழ்கின்ற மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் அன்றாட வாழ்வில் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படக் கூடாது என்பதற்காக சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாக நிலைநாட்டுகின்ற பொறுப்பை தமிழீழ காவல்துறை, தமிழீழ நீதிநிர்வாகத்துறை போன்றவற்றின் ஊடாக கடந்த 12 வருடமாக மிகத்திறமையாக எமது தேசியத் தலைவர் அவர்கள் முன்னெடுத்து வருகிறார்.

இதனால் இன்று எமது பகுதிகளிலே மக்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். குற்றச் செயல்கள் வெகுவாக குறைந்திருக்கிறது. உயர் பண்புமிக்க தமிழீழ கலாசாரத்தைப் பேணுகின்றஆரோக்கியமான சமூகம்கட்டி வளர்க்கப்பட்டு வருகிறது.

இன்று சில நாடுகளை எடுத்துப் பார்த்தால் புரியும், நீதி மன்றங்களுக்கு வருபவர்கள் நீதிமன்ற வளாகத்தினுள்ளே வைத்து கடத்தப்படுகிறார்கள். கொலை செய்யப்படுகிறார்கள். மனித உரிமைகள் மதிக்கப் படாத நிலை காணப்படுகிறது. நீதி விலை பேசி விற்கப்படுகிறது. சட்டத்தையும் ஒழுங்கையும் சரியாக நடைமுறைப்படுத்த முடியாது தள்ளாடுகிறார்கள்.

ஆனால் எமது பகுதிகளில் ஒரு சிறந்த சமூகத்தை உருவாக்குவதற்கும் சிறப்பான கலாசாரத்தைப் பாதுகாப்பதற்கும் தமிழீழ நீதிநிர்வாகத்துறையும் தமிழீழ காவல் துறையும் சிறப்பான முறையில் செயற்பட்டு வருகிறது. இது உலகமே அறிந்த உண்மை.

எமது மக்களின் நலனுக்காக எங்கள் பணியை மேலும் விரிவு படுத்தி உயரிய சேவை புரிகின்ற நோக்கமாகவே எமது செயற்பாடுகள் அமையும். அந்த வகையில் மன்னார் மாவட்டத்தில் வாழ்கின்ற மக்களின் நன்மை கருதி அங்கே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணி இந்த மக்களின் நலனையும், பாதுகாப்பையும், சுதந்திரத்தையும் பேணுகின்ற வகையில் நாங்கள் செயற்படுவோம்.

நாம் மனித உரிமைகளைச் சரியான முறையில் மதித்து வருகிறோம். இங்கேதான் மக்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். அவர்களின் சுதந்திரம் சரியான முறையில் பேணப்பட்டு வருகிறது. கலாசாரம், பண்பாடு, பொருளாதாரம், சமூக அபிவிருத்தி என்பன அனைத்திலுமே அவர்களுக்குரிய சுதந்திரம் பேணப்பட்டு அவர்கள் சுதந்திர நற்பிரஜைகளாக வாழ வேண்டும் என்ற நல்நோக்குடன் தான் தமிழீழத் தேசியத்தலைவர் இந்த நீதிமன்றங்களை உருவாக்கினார்.

இன்று எமது கட்டுபாட்டில் இல்லாத எமது தாயகப்பகுதிகளில் எதிரி திட்டமிட்டு கலாசார சீரழிவுகளையும், குற்றச்செயல்களையும் அதிகரித்து எமது இனத்தை அழிவுப்பாதையில் கொண்டு செல்வதற்கு எதிரி திட்டமிட்டு செயற்பட்டு வருகிறான். எமது தாயகத்தின் எந்தப்பகுதிகளிலானாலும் சரி மக்களின் நலனுக்குக் குந்தகம் ஏற்படுத்துபவர்கள் மீது தமிழீழ நீதிமன்றம் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் எனவும் தெரிவித்தார்.

(லோ,தீ)

# கொழும்பு முன்னாள் துணைமேஜருக்கு நீதிமன்றில் பிடியாணை பிறப்பிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் முன்னாள் கொழும்பு துணை மேஜருக்கு நீதிமன்றினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

யூ.எல்.ரிரஸ் பெரேரா என்பவருக்கே வழக்கொன்றிற்காக நீதிமன்றில் சமூகமளிக்காமையினால் கொழும்பு மாவட்ட மேலதிக நீதவானால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# சிறில.பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் திட்டமிட்டபடி வவு. வரவில்லை

(கொழும்பு)

சிறிலங்காவின் பிரதிப்பாதுகாப்புஅமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க வவுனியாவுக்கு செவ்வாய்க்கிழமை வருவதாகத் தெரிவித்த போதும் அவரின் பயணம் குறிப்பிட்டவாறு இடம்பெறவில்லை.

கடந்த சனியன்று வன்னி இராணுவத்தளபதி சிசிற விஜயசூரிய வன்னிச்செய்தியாளர்களை அழைத்து இவரின் பயணத்தினை உறுதிசெய்திருந்தார். எனினும் திட்டமிட்டவாறு அவரின் பயணம் இடம்பெறவில்லை.

# குடிவரவு,குடியகல்வு சட்டங்களை மீறுவோருக்கு 20 வருட கடுங்காவல்

## அமைச்சர் ரணவிராஜா

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வுச் சட்டங்களை மீறும் நபர்களுக்கு எதிராகச்சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு 20 வருட கடுங்காவல் தண்டனை விதிக்கப்படும் என மக்கள் பாதுகாப்பு சமாதான அமைச்சர் ரணவிராஜா இம்மாதம் 17 ஆம் திகதி அறிவித்துள்ளார்.

குடிவரவு குடியகல்வு சட்டங்கள் தற்பொழுது திருத்தியமைக்கப்பட்டு வருகின்றது. இச்சட்டம் திருத்தி அமைக்கப்பட்டால் குடிவரவு, குடியகல்வில் நடைபெறும் ஊழல்கள் நின்றுவிடும் எனவும், குடிவரவு, குடியகல்வு திணைக்களம் மற்றும் ஆட்பதிவுத் திணைக்களங்களில் நடைபெறும் ஊழல்களை ஒழிப்பதற்காக மூன்று வருடங்களுக்கு ஒரு தடவை அங்கு கடமை புரியும் ஊழியர்களை இடமாற்றம் செய்வதற்கும் திணைக்களம் தீர்மானம் எடுத்துள்ளது.

# துணுக்காய் பிரதேச மட்டத்தில் சிறுவர் தொடர்பான பயிற்சி நெறி

(துணுக்காய்)

துணுக்காய் பிரதேச மட்டத்திலான சிறுவர் தொடர்பான பயிற்சி நெறி கடந்த செவ்வாய்க்கிழமை துணுக்காய்ப் பிரதேசசபை கேட்போர் கூடத்தில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 4.30 வரை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் ப.தியாகராஜா தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கருத்துரைகளை துணுக்காய் உதவி அரசாங்க அதிபர் சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் வி.சிவபால சுப்பிரமணியம் ஆகியோர் வழங்கினார்கள். இந்நிகழ்வில் முன்பள்ளி ஆசிரியர்கள், கிராமசேவையாளர்கள், பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர். (24)

# ஓமந்தை ,தாண்டிக்குளத்தில் இராணுவத்தினருக்குப் பயிற்சி

ஓமந்தைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் தொடர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் ஓமந்தை, தாண்டிக்குளம் ஆகிய பகுதிகளில் அண்மைக்காலமாக கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். நேற்று முன்தினம் காலை ஓமந்தைப் பகுதியில் 20 இற்கு மேற்பட்ட ராங்கிகள் சகிதம் ஏராளமான இராணுவத்தினர் கனரக ஆயுதங்களுடன் பயிற்சியில் ஈடுபட்டனர். இதனை அவ் வீதியால் போக்குவரத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் அவதானித்தனர்.

(36)

# முல்லை. நுண்கலைக்கல்லூரியின் ஆடி மாத தமிழ் இசைவிருந்து

முல்லை மாவட்ட நுண்கலைக் கல்லூரியின் ஆடி மாதத் தமிழ் இசைவிருந்து கடந்த சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மண்டபத்தில், நுண்கலைக் கல்லூரிகளின் பொறுப்பாளர் தலைமையில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கலவிளக்கேற்றல் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் செல்வி வேழினி ஏற்றி வைத்தார். தொடர்ந்து இசை நிகழ்வுகள் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு தமிழிசை விருந்தாக இன்னிசை வேந்தர் உமாரமண சர்மாவின் இன்னிசை நிகழ்வு மிகவும் சிறப்பான முறையில் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து இறுதியாக இன்னிசை வேந்தர் உமாரமண சர்மாவின் கர்நாடக சங்கீத பாடல் நூல்கள் ஒரு தொகுதியும், ஒலிநாடா ஒரு தொகுதியும் நுண்கலைக் கல்லூரிகளின் பொறுப்பாளர் அவர்களிடம் கையளித்தார். (08)

# சமுதாய அபிவிருத்தி தொடர்பாக செம்மலையில் கருத்தரங்கு

முல்லை மாவட்டத்தில் சமுதாய அபிவிருத்தி தொடர்பாகவும், அக்கிராம மக்களின் தேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடுவதற்கான கருத்தரங்கு நேற்று முன்தினம் செம்மலைக் கிராமத்தில் நடைபெற்றது.

போரினால் அழிந்த இக்கிராமத்தை மீளவும் கட்டியெழுப்புவதற்காக நிக்கொட் நிறுவனம் திட்டத்தை வகுத்து வருகிறது. இதற்கான தேவைகளை இனம் கண்டு செயற்படுவதற்காகவே இக் கலந்தரையாடல் நடாத்தப்பட்டது. இக்கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியைச் சேர்ந்த திரு.பிறைன், எஸ்மனோகரன், வடக்கு கிழக்கு மாகாண சமுதாய அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் திரு.ஏ.ஜீ.எஸ்.பாலச்சந்திரன், சமுதாய அபிவிருத்தித் திட்ட இணைப்பாளர் திருஎவ்.ரி.குரூஸ் முல்லை மாவட்ட நிக்கொட் திட்டப் பணிப்பாளர் திரு எஸ்.ரகுநாதப்பிள்ளை, நிக்கொட் உதவித்திட்டப் பணிப்பாளர் எஸ்.ரவி, முல்லை மாவட்ட சமுதாய அபிவிருத்தி இணைப்பாளர் திரு.வி.நவநீதன், நிக்கொட் திட்டப் பொறியியலாளர் திரு.ஜெ.ஜெயவீரசிங்கம்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் இணைப்பாளர் திரு.எ.சுதர்சன், முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பணிப்பாளர் திரு.செல்வரட்ணம், முல்லை மக்கள் நலன்புரிச் சங்க இணைப்பாளர் திரு.நிவேகாந்தன், கடற்புலிகளின் அரச கட்டமைப்புத் தொடர்பாளர் திரு சிலம்பரசன், கிராம அலுவலர்கள், கிராம மக்கள் எனப் பெருமளவானோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (20)

# ஒட்டுசுட்டான் ம.வி. மாணவன் தேசிய மட்டத்திற்குத் தெரிவு

(ஒட்டுசுட்டான்)

ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவன் திறனாய்வுப் போட்டியில் 15 வயதுப் பிரிவுக்கான 100 மீற்றர் ஓட்டத்தில் மாகாண, மாவட்டங்கள் ரீதியாக 3 ஆம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டித் தேசிய மட்டத்திற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் யாழ். மாவட்டத்தில் நடைபெற்ற மாவட்டங்களுடனான திறனாய்வுப் போட்டியில் 3 ஆம் இடத்தைப் பெற்று வெற்றியீட்டியமைக்கான பதக்கத்தை ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய உப அதிபர் செல்வி வி.நிர்மலா தேவி மேற்படி மாணவனுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

(05)



# சுகாதாரப் பணியாளருக்கு ஆற்றலை விளக்கும் பயிற்சி

(முல்லைத்தீவு)

முல்லை. மாவட்டத்திலுள்ள சகல சுகாதார பணியாளர்களுக்குமான துறைசார் ஆற்றல் வளர்க்கும் பயிற்சி 26-07-2004 ஆரம்பித்து நடை பெற்று வருகின்றது.

நீர்ப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளரின் ஒழுங்குபடுத்தலில் இப் பயிற்சிகள் நடைபெறுகின்றன.

26, 27, 28ஆகிய மூன்று தினங்களும் சுகாதார அலுவலகங்களில் கடமை புரியும் எழுதுவினைஞர்களுக்கும்,

29, 30 ஆகிய இரு தினங்களும் மக்களுடன் நேரடியாகப் பணிபுரியும் தாதிமார்கள், மருத்துவமாதுக்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர்களுக்கான பயிற்சியும் நடைபெறுகின்றது எனவும்

இதன் மூலம் சுகாதாரப் பணியாளர்கள் தமது துறைசார் ஆற்றலை மேலும் வளர்த்துக் கொள்வதற்கு உதவும் எனவும் முல்லை. மாவட்ட பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் து.வி. ஜெயக்குலராஜா தெரிவித்துள்ளார்.

(20)

# மற்றுமொரு ஆட்கொணர்வு வழக்கில் இராணுவத் தளபதிக்கு அழைப்பாணை

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமற்போன தமிழ் இளைஞர், யுவதிகள் தொடர்பான ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகளிற்கு படைத் தரப்பு ஒத்துழைப்பு வழங்காது தொடர்ந்தும் இழுத்தடித்து வருகின்றது.

இந்நிலையில், சாவகச்சேரி நீதிமன்றில் நேற்று இடம்பெற்ற ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையின்போது படை அதிகாரிகளோ அல்லது அவர்கள் சார்பிலான சட்டத்தரணிகளோ ஆஜராகியிருக்கவில்லை. இதையடுத்து இவ் ஆட்கொணர்வு மனுக்களில் எதிரிகளாக குறிப்பிடப்பட்ட படை உயரதிகாரி லெப். கேணல் டுமிந்த ஹெப்பற்றிக்கொலாவா மற்றும் யாழ். மாவட்ட படைகளின் கட்டளைத் தளபதி ஆகியோருக்கான நீதிமன்ற அழைப்பாணைகளை யாழ். மாவட்ட பொலிஸ் அத்தியட்சகருடாக விநியோக்குமாறு நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளரர்.

1996/97ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் தென்மராட்சி தெற்கின் கைதடி- நாவற்குழி கிராமம் சுற்றிவளைக்கப்பட்ட வேளையில் காணாமற்போன 20 இற்கும் அதிகமான இளைஞர்களில், எழுவர் சார்பில் ஆட்கொணர்வு மனுக்கள் உறவினர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இம்மனுக்கள் மீதான விசாரணை நேற்று சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் இடம் பெற்றிருந்தது. இம்மனுக்களில் முதலாம் எதிரியாக படை அதிகாரியான லெப். கேணல் டுமிந்த ஹெப்பற்றிக்கொலாவாவும் இரண்டாம் எதிரியாக யாழ். மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதியும் 3 ஆம், 4ஆம் எதிரிகளாக இராணுவத்தளபதியும், சட்டமா அதிபரும் குறிப்பிடப்பட்டிருந்தனர். ஆயினும் இன்றைய விசாரணைகளில் எதிரிகளோ அல்லது அவர்கள் சார்பு சட்டத்தரணியான கப்டன் குறாரப்புவோ ஆஜராகியிருக்கவில்லை, சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி செல்வி சுகந்தி கந்தசாமி ஆஜராகியிருந்தார்.

இதேவேளை மனுதாரர் சார்பில் சட்டத்தரணிகளான அ.விநாயகமூர்த்தி மற்றும் எம்.ஜெ. மீடியஸ் ஆஜராகியிருந்தனர். விசாரணைகளை மேற்கொண்டிருந்த நீதிவான் முதலாம், இரண்டாம் எதிரிகளுக்கான அழைப்பாணைகளை யாழ். மாவட்டப்பொலிஸ் அத்தியட்சகர் ஊடாக விநியோகிக்க உத்தரவிட்டார். அத்துடன் இராணுவத் தளபதிக்கான அழைப்பாணையினை இலங்கை இராணுவத்தின் சட்டப்பிரிவிற்கான பொறுப்பதிகாரியூடாக அறிவிக்கவும் நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டுள்ளார். அத்துடன் விசாரணைகளை எதிர்வரும் ஓகஸ்ட் 9 ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். இதனிடையே குறித்த முதலாம் எதிரியான லெப். கேணல் டுமிந்த ஹெப்பற்றிக்கொலாவ தற்போது பலாலி இராணுவத்தளத்தின் சிரேஷ்ட அதிகாரியாக கடமையாற்றி வருகின்றார். விசாரணைகளுக்காக ஆஜராகுமாறு கடந்த ஆறு மாதங்களாக நீதிமன்றத்தால் அழைப்பாணைகள் அனுப்பப்படுவது குறிப்பிடத்தக்கது. (27,33)

# படை உயரதிகாரிகளின் பணிப்பின் பேரிலேயே உங்கள் பிள்ளைகளைக் கைது செய்தேன்

## -கோப்ரல் ராஜபக்ஷ தெரிவிப்பு

"படை உயரதிகாரிகளின் பணிப்பின் பேரிலேயே அரியாலைப் பகுதிகளில் உங்கள் பிள்ளைகளை கைதுசெய்தேன். கைது செய்தவர்களை அவ்வதிகாரிகளிடம் நான் உடனடியாக கையளித்து விட்டேன்" என்றார் கோப்ரல் ராஜபக்ஷ.

நீதிமன்ற அமர்வின் மதிய இடைவேளையின் போது காணாமற்போன பிள்ளைகளது பெற்றோர்கள் ராஜபக்ஷவிடம் தமது பிள்ளைகளது நிலை பற்றி கேள்விகளை எழுப்பினர். அப்போது பதிலளித்த ராஜபக்ஷ "கைது செய்த இளைஞர்களை குறித்த படை அதிகாரிகளிடம் நான் கையளித்து விட்டேன். ஆனால் அதன் பின்னர் அவர்களுக்கு என்ன நடந்ததென எனக்குத் தெரியாது. ஆனாலும் வழக்கு விசாரணையில் அப்படை அதிகாரிகளைப்பற்றி பிரஸ்தாபிப்பேன்" என கூறினார் . (27)

# குடாநாட்டிலுள்ள அடிப்படைப் பிரச்சினை குறித்து ஆராய அநுராதபுரத்தில் இன்று விசேட கூட்டம்

(வடமராட்சி)

யாழ்.குடாநாட்டில் எதிர்கொள்ளப்படும் அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வதற்கான விசேட கூட்டமொன்று இன்று அநுராதபுரத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை அரசின் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் விவகார அமைச்சர் அமரசிறி தொடங்கொட இக்கூட்டத்திற்கு தலைமை தாங்கவுள்ளார். இக்கூட்டத்தில் கலந்து கொள்வது தொடர்பாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் விடுக்கப்பட்ட அழைப்பினையடுத்து யாழ் மேலதிக அரச அதிபர் தலைமையில் குடாநாட்டைச் சேர்ந்த பிரதேச செயலர்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர்கள் நேற்று முன்தினம் அநுராதபுரம் பயணமாகியுள்ளனர்.

தற்போது கொழும்பில் நிற்கும் யாழ் அரச அதிபர் செ. பத்மநாதனும் நேரடியாக அங்கு சென்று கூட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதாகத் தெரிய வருகின்றது. இதனிடையே குடாநாட்டில் அடிப்படை வசதிகள் எதனையும் உருவாக்க நடவடிக்கை எடுக்காத, இலங்கை அரசின் அமைச்சர்கள் எவராயினும் குடாநாட்டிற்கு வருகை தந்தால் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாக பொது அமைப்புக்கள் அறிவித்துள்ள நிலையில் அமைச்சரின் இக்கூட்டம் அநுராதபுரத்தில் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. (21)

### வீரச்சாவடைந்த...

யின் முதல் மாவீரர் லெப். ஆதிரையின் திருவுருவப்படத்திற்கு போராளி கோதை மலர் மாலை அணிவித்தார். 57 சிறுத்தைகளின் திருவுருவப்படங்களுக்கு போராளி கங்கா மலர்மாலை அணிவித்தார். தொடர்ந்து சோதியா படையணியின் 8 ஆம் ஆண்டு ஆரம்ப நாளை முன்னிட்டு நடாத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றிய வீராங்கனைகள் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளுடன் நிகழ்வுகள் அனைத்தும் நிறைவு பெற்றன.

### ஜே.வி.பி....

தேவையில்லை. இது மிகப் பெரிய சவால். இதனால் நாங்கள் பொறுப்புடன் சனாதிபதிக்கு கூறுவது என்னவென்றால் வீரவன்சவின் கருத்துக்களைப் பொருட்படுத்தாமல் இடைக்கால நிர்வாக யோசனையுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் ஐ.தே.கட்சி தெளிவுடனும் நிபந்தனைகள் ஏதும் இன்றியும் சனாதிபதிக்கு ஆதரவு வழங்கும். இச்சமாதானத்திற்கு எந்த ஓர் அரசியல் பேதங்களும் அதிக பட்சமானதாக இருக்க முடியாது. இப்பேச்சு வார்த்தைகள் தோல்வியடைந்து இந்நாட்டை யுத்த ஒன்றிற்குக் கொண்டு செல்வதற்கான எந்தவோர் அரசியல் நடவடிக்கைக்கும் நாம் உடன்பட மாட்டோம் என மேலும் தெரிவித் தார்.

இதேவேளை ஜே.வி.பி.யினரை விட அதிகமான வாக்குகள் ஐ.தே.கட்சியிடம் உள்ளதென அவர் வலியுறுத்தியுள்ளார்.

### கனடாவிலிருந்து...

மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் போன்ற அம்சங்களை முக்கியத்துவப்படுத்தி தனது கருத்தரங்கினை மேற்கொண்டார்.

இந்தக் கருத்தரங்கில் கிளிநொச்சி மாவட்ட வைத்திய அதிகாரி, கிளி. சுகாதார அதிகாரி மற்றும் வைத்தியசாலை டாக்டர்கள், தாதிமார்கள் போன்றோர் கலந்து கொண்டனர். சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை இந்தக் கருத்தரங்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (சோ, கு)

### கருணா...

வைக்கப்பட்டிருந்த சொகுசு வாகனம் தெஹிவளையைச் சேர்ந்த முஸ்லிம் நபர் ஒருவருக்குச் சொந்தமானதென சிறிலங்காப் பொலிசார் தெரிவிதுள்ளனர். குறித்த வாகனம் கருணா குழுவினருக்கு ஒரு மாதக் குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்ததாகவும் சில நம்பகமான தகவல்கள் தெரிவிக்கின்றன.

### புலிகளுடனான....

படுத்த வேண்டுமெனத் தெரிவித்தார்.

பேச்சுவார்த்தை மேசையில் அமர்ந்து கொண்டால் பல பிரச்சினைகளுக்குத் தகுந்த முறையில் தீர்வுகளைக் காண முடியும் என்றார்.

எனவே, தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான நெகிழ்வுப் போக்குடன் செயற்பட வேண்டும் எனவும், வடக்கிலும், தெற்கிலும் இடம்பெறும் கொலைகளைத் தடுத்து நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# யூனியன் கல்லூரி பிரித்தானிய அணியை, கிளி.அணி வெற்றி!

பிரித்தானியாவில் இயங்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி பழைய மாணவர் அணிக்கும் கிளி. மாவட்ட தெரிவு அணிக்கும் இடையிலான 17 வயதுக்குட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டி நேற்று பிற்பகல் 5.30 மணியளவில் கிளி.பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

தமிழீழ விளையாட்டுத்துறை செயலர் அன்ரன் அன்பழகன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியினை கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா ஏற்றிவைத்தார். பிரித்தானிய அணியின் பயிற்றுநர் சத்தியநாதன் யூனியன் கல்லூரி அதிபர் புண்ணிய சீலம் ஆகியோருக்கு வீரர்கள் அறிமுகம் செய்து வைக்கப்பெற்றதைத் தொடர்ந்து போட்டி ஆரம்பமானது.

இப்போட்டியில் கிளி.அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. செ.குலேந்திரன் இ.சசிதரன் ஆகியோர் கோல் போட்டனர். இப்போட்டிக்கு பிரதமநடுவராக திரு.க.கலாதரனும், பக்கநடுவர்களாக திருவாளர்கள் யோ. திருக்குமார் வி.சுவிஸ்கரன் ஆகியோர் கடமையாற்றினர்.

# சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு பற்றி காவல்துறை கருத்தூட்டல்

தமிழீழ காவல்துறையினரால் நேற்று முறிகண்டிப் பகுதியில் அமைந்துள்ள (H.V.S.றோட் இன் பிறைவேட் லிமிட்டட்) டிப்பர், உழவு இயந்திர சாரதிகளுக்கு வீதி ஒழுங்கு சம்பந்தமான கருத்தூட்டல் செயலமர்வு நடைபெறவுள்ளது.

காவல்துறை வாகனப் போக்குவரத்து கண்காணிப்பாளர் திரு.கு. கனகலிங்கம் அவர்களது தலைமையில் நடைபெற்ற இச் செயலமர்வில் வீதியை பயன்படுத்தும் நடைமுறை பற்றியும், விபத்தின்றி வாகனத்தை செலுத்துவது பற்றியும் தெளிவு படுத்தப்பட்டது.

இதன் கருத்துக்களை தமிழீழ காவல்துறையின் வாகனப் போக்குவரத்துப் பிரிவுக் கண்காணிப்பாளர் திரு.கு.கனகலிங்கம், வாகனப் போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பாளர் சி.சிவகுமாரன், வாகனப் போக்குவரத்துப் பிரிவு உப பொறுப்பாளர் திரு.திருக்குமார் ஆகியோர் வழங்கினர். இது போன்ற கருத்தூட்டல் செயலமர்வுகள் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருவது தெரிந்ததே.

# யாழ்.இராணுவத்தளபதியுடன் தெங்கு உற்பத்தியாளர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

வடமாகாண தெங்கு உற்பத்தியாளர் சங்கத்தினருக்கும் யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திர பாலவுக்குமிடையேயான முக்கிய சந்திப்பு ஒன்று இன்று காலை 10.00 மணியளவில் யாழ். நகரில் உள்ள 512 ஆவதுபடையணியினரது செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் படைத் தரப்பினரால் முடக்கி வைக்கப்பட்டள்ள தென்னந்தோட்டங்களைப் பார்வையிடச் செல்லல், பராமரிப்புச் செய்தல் என்பவற்றிற்கான அனுமதி பெறுவது குறித்து இதன் போது முக்கியமாக கலந்துரையாடப்படும்.(33)

# கோதுமை மாவிற்கான இறக்குமதி வரி நீக்கம்

கோதுமை மா இறக்குமதிக்கு இருந்து வந்த வரி நீக்கப்பட்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருப்பதாக வர்த்தக நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இதுவரை காலமும் 25% வீத இறக்குமதி வரி கோதுமை மாவிற்கு இருந்து வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.


## 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 04 - 07 - 1982



வீரச்சாவு 30 - 07 - 2001

**மேஜர் பரன்**

**கணபதிப்பிள்ளை ரதன் [யா]**

[சம்பவம்—மணலாற்றில் நேரடி மோதலின் போது]

புலிவீரம் பேசின்
தமிழீழம் வெகுதூரமில்லை
விடுதலைக்காய்—நீ
வித்தாகி மூன்றாண்டுகள்

அதோ தெரியுது தமிழீழம்
இதோ இன்னுமா சமாதானம்
உன்வழி தொடர
இன்னும் இன்னும் பல வீரர்
உன் பிரிவால் துயருறும்

வைத்தியசாலைக்கு அருகாமை,
1ஆம்வட்டாரம்,
முள்ளியவளை.

வே.மகவதாஸ்
குடும்பத்தினர்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.